**54. அருச்சுனன் வில்லால் அடிபட்ட கதை**

பாரதப் போரிலே வெற்றி பெறுவதற்காக அருச்சுனன்கணை பெற விரும்பினான். அதன் பொருட்டுக் காட்டுக்குச் சென்று இறைவனை நோக்கிக் கடுந்தவம்புரிந்தான். அருச்சுன்னுடைய தவத்தைக் கெடுத்துவிட



வேண்டுமென்று துரியோதனன் எண்ணினான். மூகாசுரன் என்பவனை அனுப்பினான். அம்மூகாசுரன் பன்றி வடிவம் எடுத்துக் கொண்டு அருச்சுனனைக் கொல்வதற்குவந்தான். சிவபெருமான் இதனை உணர்ந்தார். அவ்வசுரனைக் கொன்று அருச்சுனனைக் காப்பாற்ற வேண்டும்என்று எண்ணினார். தாம் வேட வடிவம் எடுத்துக்கொண்டு பன்றி வடிவாக வந்த மூகாசுரனைக் கொல்லவந்தார். தாம் ஒரு அம்பை அப்பன்றியின்மீது செலுத்தினார். பன்றியின் நிலையை அறிந்த அருச்சுனன் தானும் ஒரு கணையை அப்பன்றியின் மீது செலுத்தினான். அப்பன்றி மாண்டு விழுந்தது. அப் பன்றியைக் கொன்றது குறித்து அருச்சுனனுக்குஞ் சிவ பெருமானுக்குஞ்சொற்போரும், விற்போரும், மற்போரும் நிகழ்ந்தன. விற்போரில் அருச்சுனனுடைய வில் முறிந்தது. முறிந்தவில்லினால் அருச்சுனன் வேடனுடைய முடிமீது அடித்தான். அவ்வடி எல்லா உயிர்த் தொகைகளினுடையதலைமீதும்பட்டது. இறைவன் அருச்சுனனுக்கு வெளிப் பட்டுப் பாசுபதக் கணை முதலியன கொடுத்து மறைந்தருளினார்.

(இறைவன் எங்கும் நிறைந்தவர் )